*5*

# மாபெரும் வெளிப்படுத்துதல்

## (யோவான் 14)

*“நான் உங்களைத் திக்கற்றவர்களாகவிடேன், உங்களிடத்தில் வருவேன், இன்னும் கொஞ்சக்காலத்திலே உலகம் என்னைக் காணாது, நீங்களோ என்னைக் காண்பீர்கள்; நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள். நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள். என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார். ஸ்காரியோத்தல்லாத யூதா என்பவன் அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்தாமல் எங்களுக்கு உம்மை வெளிப்படுத்தப்போகிற காரணமென்ன என்றான். இயேசு அவனுக்கு பிரதியுத்தரமாக: ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம், என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக்கொள்ள மாட்டான். நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது” (வசனங்கள் 18-24).*

மேல்வீட்டில் இயேசு, தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு முந்திய வியாழக்கிழமை இரவில், அப்போஸ்தலர்களுடன் பேசிக்கொண்டிருக்கையில், உணர்விழக்கச் செய்யும் சத்தியம் ஒன்றை அவர்களுக்கு வெளிப்படுத்தினார்: அவர்களை விட்டு அவர் புறப்பட்டுக் கொண்டிருத்தல். அவர் பிதாவினிடத்திற்குச் சென்றுகொண்டிருந்தார் என்பதை அவர்கள் தெளிவற்ற வகையிலேயே புரிந்து கொண்டனர் (14:12), ஆனால் மற்ற ஒவ்வொன்றும் மங்கலாகவே காணப்பட்டது. குழப்பம், திகைப்பு மற்றும் நிச்சயமற்றதன்மை ஆகியவை அவர்களைச் சுற்றிலும் நிறைந்திருந்தன. அவரிடத்தில் இருந்து நிரந்தரமாகப் பிரிக்கப்பட்டு இருத்தலின் வேதனையானது, அவர்களை வருத்தத்தின் ஈட்டியினால் ஊடுருவி இருந்தது. “நாம் என்ன செய்வோம்? நமது எதிர்காலம் எவ்வாறு இருக்கும்? நாம் இதை எவ்வாறு கையாள முடியும்?” மற்றும் இவற்றைப் போன்றே பல கேள்விகள் அவர்களின் சிந்தைகளில் வந்திருக்க வேண்டும். கடந்த மூன்று ஆண்டுகளில், இயேசுவின் சொந்தப் பிரசன்னம் என்பது அவர்களுக்கு பலத்த ஆறுதலாக இருந்திருந்தது. அவர்களின் மேய்ப்பராக அவர் இருந்திருந்தார், அவர்கள் அவரது ஆடுகளாக இருந்திருந்தனர். அவர்கள் அவரைப் பின்பற்றுவதற்காக எல்லாவற்றையும் விட்டு வந்திருந்தனர், இப்போது அவர்கள் தனிமையில் விடப்படப் போவதாக உணர்ந்தனர்.

*அவர்களின் கிளர்ச்சியுற்ற இருதயங்களைச் சென்று அடைந்த இயேசு தம்மை ஒரு வித்தியாசமான வடிவிலும் வித்தியாசமான வகையிலும் அவர்கள் மீண்டும் காண்பார்கள் என்ற வாக்குத்தத்தம் கொண்டு அவர்களை மறு உறுதிப்படுத்தினார். அவர்களிடம் அவர், "நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன்" என்று கூறினார். "உங்களிடத்தில் வருவேன்" (14:18). "திக்கற்றவர்கள்" என்பதற்கான (orphanos என்ற) வார்த்தை புதிய ஏற்பாட்டில் - இவ்விடத்திலும் யாக்கோபு 1:27லும் ஆக இருமுறை மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது. வேறுவார்த்தைகளில் கூறுவது என்றால், அப்போஸ்தலர்கள் ஆதரவின்றி இருக்கும்படி விட்டுவிடப்பட மாட்டார்கள்.*

*''இன்னும் கொஞ்சக்காலத்திலே'' - அதாவது, அவரது மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் பெந்தெகொஸ்தே நாளுக்குப்பின்பு - அவர்களுக்கு அவர் தம்மை வெளிப்படுத்துவார். "இன்னும் கொஞ்சக்காலத்தில் உலகம் என்னைக் காணாது, நீங்களோ என்னைக் காண்பீர்கள்; நான் பிழைக்கிறபடியினால் நீங்கள் பிழைப்பீர்கள்" என்று அவர்களுக்கு அவர் மென்மையாகக் கூறினார் (14:19). அவர் குறிப்பிட்ட இந்த வெளிப்பாடு, உலகத்திற்கானதாக இராமல் அவர்களுக்கானதாக இருந்தது. அவர்கள் இதற்கு முன்பு அவரைக் கண்டிருந்த வகையிலான உடலுக்குரிய வடிவில் அவர் இந்த பூமிக்குத் திரும்பி வரமாட்டார்; மாறாக, உயிர்த்தெழுந்த கிறிஸ்து தம்மை அப்போஸ்தலர்களுக்கும் தமக்குக் கீழ்ப்படிந்து இருந்தவர்களுக்கும் வெளிப்படுத்துவார்.*

*அவர்கள் அவரை மறுபடியும் காண்பதற்கான வேளை வந்தபோது, அவர்கள் அவரைக் குறித்த அறிவின் மாபெரும் வட்டாரத்திற்குள்ளும் நுழைவார்கள். அவரும் பிதாவும் ஒன்றாயிருக்கின்றனர் என்பதை அவர்கள், இதற்கு முன்பு எப்போதும் இருந்ததைக் காட்டிலும் அதிகம் தெளிவாகப் புரிந்து கொள்வார்கள். அவர்கள் இந்த சத்தியத்தைப் பற்றிச் சிலவற்றைக் கற்றிருந்தனர், ஆனால் அவர்கள் அதைப் பற்றிய அதிகம் பெரிய புரிந்து கொள்ளுதலுக்குள் பிரவேசிக்க நியமிக்கப் பட்டிருந்தனர். அத்துடன் கூடுதலாக, அவர்கள் அவருக்குள் தாங்கள் உண்மையாகவே வாழுதலையும் அவர்களுக்குள் அவர் உண்மையாகவே வாழுதலையும் புரிந்து உணர்ந்து கொள்வார்கள். "நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்" (14:20) என்றார் அவர்.*

*அவர்களின் அறிவு அதிகமாவது மாத்திரமல்ல, ஆனால் அவருடனான அவர்களின் உறவு இன்னும் அதிகம் தனிப்பட்டதாகும். அவர்கள், எல்லா வெளிப்பாடுகளிலும் மாபெரும் வெளிப்பாட்டை - கர்த்தருடைய பூமிக்குரிய ஊழியம் முழுவதும் கண்ணோக்கி இருந்த வெளிப்பாட்டை அனுபவிக்க வேண்டியிருந்தது. அவர்களிடத்தில் இயேசு, ''என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன்" என்று கூறினார் (14:21). அவரது வெளிப்பாடு தனிப்பட்ட வகையில் அவர்களுக்குச் சொந்தமானதாக மற்றும் தனித்த வெளிப்பாடாக இருக்கும்.*

*இவ்வார்த்தைகள், அவர்கள் புரிந்துகொள்ளக் கடினமானவையாக இருந்தன. (ஸ்காரியோத் அல்லாத) யூதா அவரிடத்தில், ''ஆண்டவரே, நீர் உலகத்துக்கு*

உம்மை வெளிப்படுத்தாமல் எங்களுக்கு உம்மை வெளிப்படுத்துப்போகிற காரணமென்ன?'' என்று கேட்டார் (14:22). எதிர்காலத்தில் ஒரு கட்டத்தில், இயேசு தம்மை உலகத்திற்கு வெளிப்படுத்துவார் என்பது அவருக்கான திட்டமாக இருந்தது என்று யூதா நினைத்திருந்தார் - ஆனால் (மற்ற பெரும்பான்மையான மக்களுடன்) யூதா, அந்தத் திட்டத்தைக் தவறாகப் புரிந்துகொண்டிருந்தார். யாரெல்லாம் இயேசுவுக்குக் கீழ்ப்படிகிறாரோ, அவருக்குள் வந்து தங்கியிருத்தல் என்பதே இயேசுவுக்கான தேவனுடைய மாபெரும் திட்ட வடிவமாக இருந்தது. ஆகவே பிற்பாடு இயேசு யூதாவிடம், "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்'' என்று கூறினார் (14:23).

அப்படியென்றால் அது மாபெரும் வெளிப்பாடாக உள்ளது: பிதாவாகிய தேவனும் இயேசுவும் நம்முடன் தங்கியிருக்கும்படி வருதல். அவர்கள் வந்து நம்முடன் "தங்கி இருத்தல்'' என்பதைச் செய்கின்றனர். மனித அனுபவம் யாவற்றிலும் இதைப்போன்றது வேறு எதுவும் இருக்க முடியாது. இயேசு பிறந்தபோது அவருக்கு "இம்மானுவேல்'' என்ற பெயர் அளிக்கப்பட்டது, இது "தேவன் நம்மோடு இருக்கிறார்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (மத்தேயு 1:23). பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் நம்மை, தேவன் நம்முடன் வாசம்பண்ணத் திட்டமிட்டார் என்ற ஆழ்ந்தறிவுள்ள சத்தியத்திற்கு வழிநடத்துகின்றன. யோவான், ''நீங்கள் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி, நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கும் அறிவிக்கிறோம்; எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது'' என்று எழுதினார் (1 யோவான் 1:3). இயேசு தமது அப்போஸ்தலர்களுக்குப் பின்வருமாறு கூறினார்:

> நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும். இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள் (14:16, 17).

இந்த சத்தியம் எவ்வளவு ஆச்சரியமான வகையில் ஊக்கமளிப்பதாக உள்ளது! இருப்பினும் பின்வரும் கேள்வி எழுகிறது: "இது எவ்வாறு நடைபெறுகிறது?'' இந்த உள்ளாக வாசம் பண்ணுதலை உலகம் அனுபவித்து உணர இயலாது என்று நாம் அறிகிறோம், ஆனால் அதற்குள் பிரவேசிப்பதற்கு, விசுவாசி ஒருவர் என்ன செய்கிறார்? கிறிஸ்துவின் பிரசன்னத்திற்கான பாதைவழி எது?

## விசுவாசம்

முதலாவது, விசுவாசத்தின் விஷயம் உள்ளது. வேதாகம விசுவாசம் பற்றி எளிமையாகக் கூறுவது என்றால், அது தேவன் கூறியுள்ளவற்றை ஏற்றுக்கொண்டு, அதன்படி நம்பிக்கை மற்றும் அன்பு ஆகியவற்றைக் கொண்டு செயல்படுதலாக உள்ளது. நமது விசுவாசமும், இயேசுவின் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளுதலும்

மற்றும் நம்பிக்கை, அன்பு ஆகியவற்றினால் அவற்றின்படி செயல்படுதலுமே இயேசுவுடனான நமது உறவின் அஸ்திபாரமாக உள்ளது. அவர், "இன்னும் கொஞ்சக்காலத்திலே உலகம் என்னைக் காணாது, நீங்களோ என்னைக் காண்பீர்கள்; நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள்" என்று கூறினார் (14:19). நாம் அவரைக் "காண்போம்" என்றும் "பிழைப்போம்" என்றும் அவர் வாக்களித்தார். அவருக்குள் விசுவாசம் கொண்டுள்ளவர் மாத்திரமே தமது வாழ்வில் இந்த வாக்குத்தத்தங்களின் நிறைவேற்றத்தைக் காணக்கூடியவராக இருப்பார்.

## அன்பு

*இரண்டாவது, அவரில் அன்புகூருதல் என்பது சித்தரிப்பின் ஒரு பகுதியாக உள்ளது.* விசுவாசம் மற்றும் அன்பு ஆகியவை இணைந்து செல்கின்றன. ஒன்று மற்றொன்றிற்கு வழிநடத்துகிறது. விசுவாசம் நம்மை அவரது வசனங்களுக்குள் கொண்டுவருகிறது; அன்பு நம்மை அவரது இருதயத்திற்குள் கொண்டுவருகிறது. இயேசுவில் அன்புகூருதல் என்பது அவரைப் பின்பற்றும் சந்தோஷத்தில் நமது இருதயங்களை அவருக்குக் கொடுத்தல் என்று அர்த்தப்படுகிறது. அவர் செய்துள்ள யாவற்றிற்கும் நன்றி நிறைந்த பாராட்டுதலில், அவரது நற்தன்மையின் மதிப்பைப் போற்றுதலில், மற்றும் அவரது ஞானத்திற்குப் பரிசுத்தமான மதிப்புக் காண்பிப்பதில், நாம் நம்மை அவரது சீஷர்களாக ஒப்புக்கொடுக்கிறோம். நாம், "என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன்" என்று வாசிக்கிறோம் (14:21). இயேசுவை அன்புகூருகிறவர்களில் இயேசுவும் அவரது பிதாவும் தங்கி இருக்கின்றனர்.

## கீழ்ப்படிதல்

*மூன்றாவது, கீழ்ப்படிதல் தேவைப்படுகிறது.* விசுவாசமும் அன்பும், கிறிஸ்துவின் வசனங்களை மதித்து ஏற்றுக்கொண்டு அவற்றிக்குக் கீழ்ப்படியும்படி நம்மைத் தூண்டுகின்றன. இயேசு பின்வருமாறு கூறினார்:

> ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், *அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான்,* அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம், என்னில் அன்பாயிராதவன் *என் வசனங்களைக் கைக்கொள்ளமாட்டான்.* நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது (14:23, 24; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

உண்மையான விசுவாசமும் அன்பும், நமது நம்பிக்கை மற்றும் போற்றுதல் ஆகியவற்றின் கருப்பொருளான கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியும்படி நம்மை வழிநடத்துகின்றன. பரலோகத்தில் உள்ள பிதா, தமது குமாரனை அன்புகூர்ந்து அவருக்குக் கீழ்ப்படிகிறவர்கள்மீது விசேஷித்த வகையில் அன்புகூருகிறார்.

## முடிவுரை

யாத்திராகமம் 33:17-23ல், பழைய ஏற்பாட்டின் மாபெரும் வெளிப்படுத்துதல்களில் ஒன்று காணப்படுகிறது. தேவனிடத்தில் மோசே, "உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும்" என்று வேண்டிக் கேட்டுக்கொண்டார் (யாத்திராகமம் 33:18). தேவன், "என்னுடைய தயையை எல்லாம் நான் உனக்கு முன்பாகக் கடந்துபோகப்பண்ணி, கர்த்தருடைய நாமத்தை உனக்கு முன்பாகக் கூறுவேன்; ..." என்று கூறினார் (யாத்திராகமம் 33:19). தேவனுடைய முகத்தைக் காண மோசே அனுமதிக்கப்படவில்லை, ஆனால் அவரது மகிமையின் பின்புறத்தை மோசே கண்டார். அவரைத் தேவன் கன்மலையின் வெடிப்பிலே வைத்து, தாம் கடந்துபோகும் வரையிலும் தமது கரத்தை அவர்மீது வைத்தார். பின்பு அவர் தமது கரத்தை எடுத்து, தமது மகிமையின் பின்புறத்தை மோசே காண அனுமதித்தார். மோசே கொண்டிருந்தது என்ன ஒரு அனுபவம்! பழைய ஏற்பாடு முழுவதிலும் இவ்வகையான நிகழ்ச்சி இது ஒன்றுதான் உள்ளது.

நம் ஒவ்வொருவருக்கும் இயேசு அளிக்கும் வெளிப்பாடு - நம்முடனும் நமக்குள்ளேயும் அவர் வாழுதல் மூலமாகத் தம்மையே வெளிப்படுத்துதல் - பழைய ஏற்பாட்டு நிகழ்ச்சிக்கு மேலாக நிற்பதாக உள்ளது. தமக்குள் நம்மை ஏற்றுக்கொண்ட, நமக்குள் பிரவேசித்திருக்கிற மற்றும் நமக்குப் பிதாவைக் காண்பித்திருக்கிற ஒருவர் என்ற வகையில், அவர் பிதாவுடன் ஒன்றாக இருப்பதை, அவரது போதனைகளின் மூலமாக நாம் காண முடியும்.

---

*"அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களானால், அவரை அறிந்திருக்கிறோமென்பதை அதினால் அறிவோம். அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை. அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்; நாம் அவருக்குள் இருக்கிறோமென்பதை அதினாலே அறிந்திருக்கிறோம். அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்கவேண்டும்" (1 யோவான் 2:3-6).*